தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே உள்ள தகராறைத் தீர்த்துக் கொள்ள மன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அதற்கு வேறு வழி வகைகள் இருக்கின்றன என்ற காரணத்தாலும், எதிர்காலத்தில் வரப்போகிற ஸ்ட்ரைக் கைப்பற்றி விவாதிக்க இந்த மன்றத்தை ஒத்தி வைப்பது முறை யாகாது என்ற காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக் கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

சீர்காழி, செட்டி நாடு பல் தொழில் பயிற்சி பள்ளிகளில் ஆசிரியர், பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் 41-வது விதியின்கீழ் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள்.

DR. H. V. HANDE: I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance viz., non-payment of salaries to the teaching and non-teaching staff including employees of workshops of Srinivasa Subbaraya Polytechnic, Puttur, Sirkali and Annamalai Polytechnic, Chettinad for five months and three months respectively and the necessity to arrange for payment of salaries to the concerned directly without routing them through the management.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சீனுவாசா சுப்பராய பல்தொழில் பயிற்சிப் பள்ளி, தஞ்சவூர் மாவட்டம் புத்தூரில் (சீர்காழி) நிறுவப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளி இராமநாதபுரம் மாவட்டம், செட்டிநாட்டில் நிறு வப்பட்டுள்ளது.

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நிறுவுவதற்காகும் தொடராச் செலவை மத்திய அரசும், மாநில அரசாங்கமும் பள்ளி நிர்வாகமும் 2 : 1 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். தொடர் செலவும் முதல் ஐந்தாண்டுகளுக்கு அதே விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தொடர் செலவுக்கான மத்திய அரசு உதவி நிறுத்தப்பட்டது. அதன் பின்னர், தொடர் செலவு முழுவதையும் மாநில அரசாங்கமும் பள்ளி நிர்வாகமும் மட்டுமே ஏற்று வருகின்றன. தொடர் செலவில் ஏற்படுகிற நிகர பற்றாக் குறைக்கென மாநில அரசாங்க உதவி அவ்வப்போது அதிகமாக்கப்பட்டு வந்து, 1967-68 முதல் நிகர பற்றாக்குறையில் 75 சத வீதம் மாநில அரசாங்கத்தால் ஈடு செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் அதிக அளவில் உதவி அளித்த போதிலும், பல் தொழில் பயிற்சிப் பள்ளிகள் சில தொடர்செலவில் தமது பங்கை வழங்க இயலாமல் உள்ளன. தொடர் செலவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்துள்ளது என்பதையும், தாங்கள் முதற்கண்

1968 ஆகஸ்டு 22] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஏற்படுத்திய கட்டளைகளிலிருந்து தொடர் செலவை ஈடு செய்யும் அளவிற்கு வருவாய் ஈட்ட இயலவில்லை என்பதையும் பல்தொழில் பயிற்சிப் பள்ளி நிர்வாகத்தினர் முக்கிய காரணங்களாக எடுத்துக் கூறினர்.

நிகர பற்றுக்குறையில் தமது பங்கினைச் சரிக்கட்ட இயலாமல் உள்ள பல்தொழிற் பயிற்சி பள்ளிகளில் சீனுவாசா சுப்பராய பல் தொழிற் பயிற்சிப் பள்ளியும் ஒன்றாகும். இதை எந்த அளவிற்குச் சிறந்த முறையில் நிர்வகிக்கலாம் என்பது குறித்து 1967 அக்டோபரில் நான் அதன் நிர்வாகத்தினருடன் கலந்து பேசினேன். இந்தப் பல்தொழில் பயிற்சிப் பள்ளியின் ஆசிரியர்களுக்கு கடந்த ஐந்து திங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை என்று அரசாங்கத்துக்கு அண்மையில் முறையீடுகள் வந்துள்ளன. அதன்மேல், அந்த நிறுவனத்துக்கு வழங்கப்படத்தக்க தொடர் மானியத்தில் முன்பணம் வாங்கி, ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்க தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அதன்படி, இயக்குனர் அனுப்பிய அதிகாரி மூன்று திங்கள் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு 16—8—1968 அன்று வழங்கினார். எஞ்சியுள்ள திங்களுக்கான சம்பளத்தையும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

செட்டி நாட்டில் உள்ள அண்ணாமலைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தவரையில், 1968 மே, ஜூன் திங்களுக்கான சம்பளம் சிறிது காலந் தாழ்த்தி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், 1968 ஆகஸ்ட் 1-ம் நாளன்று வழங்கப்படத்தக்க 1968 ஜூன், ஜூலை சம்பளமும் விரைவிலேயே வழங்கப்படும் என்றும் பல்தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வரிடமிருந்து அறியப்படுகிறது.

DR. H. V. HANDE : Wile we are greatful for the efforts taken to pay the salaries which are outstanding, can we get an assurance from the Minister that hereafter this sort of thing will not take place and therefore will it not be better if the amount is given directly instead of being routed through the management ? Will the Government take steps to prevent such a thing happening in future ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் கொடுக்க இயலாதிருக்கிற நிலைமையினால் கொடுக்கவில்லை. ஆனால் கொடுக்க மறுக்கத்தக்க அளவிற்கு பணம் இருந்தும் கொடுக்காமல் வேறு வகைகளில் அவர்கள் தவறு செய்தால் அப்போது அரசாங்கமே நேரடியாகக் கொடுக்கிற முறையைத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கும். அந்த நிலை ஏற்படும்போது அரசாங்கம் கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, தனியார் தீர்மானங்கள்.

DR. H. V. HANDE : About the other call attention notice, you have not given your decision. I was asked to raise it. The answer is ready.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரிய அமைச்சர் அவர்கள் வராததால் இன்னொரு நாளைக்குத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

5. தனியார் அலுவல்—தனித் தீர்மானங்கள்.
உணவு உற்பத்தி (தொடர்ச்சி).

திரு. பி. ஜி. கருத்திருமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தின்மீது விவாதிக்க, இந்த அமைச்சரவை வந்ததற்குப் பின்னுல், 1½ ஆண்டுகளுக்கு மேல் இன்றுவது சந்தர்ப்பம் கிடைத்ததற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 29—11—1967-ல் வெறுமனே இந்தத் தீர்மானத்தைப் படிக்கும் சந்தர்ப்பம் மட்டும் தான் அளிக்கப்பட்டது. இப்போதாவது ஒரு நாள் இதற்காக ஒதுக்கியதில் கூட 1 மணி 45 நிமிடங்கள் கேள்வி நேரத்திலும், கவன ஈர்ப்புத்தீர்மானத்திலும் போய் விட்டது. ஆகவே இனி மேலாவது 'நான்-அஃபிஷியல் டே' அன்று இந்த நேரத்தையும் சேர்த்து உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இன்று எப்படியிருந்தாலும்கூட, இனிமேல் நிச்சயமாக வியாழக்கிழமை என்றால், உத்தியோகப் பற்றற்ற தீர் மானங்கள் மீது பூர்ணமாக விவாதிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்பட்டால்தான் அமைச்சரவையில் அல்லது சர்க்கார் கட்சியில் இல்லாத எதிர்க்கட்சிக்காரர்களான எங்களுக்கு நிலைமை களை விளக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

முதலில் என் தீர்மானத்தை வாசித்து விடுகிறேன்—அதாவது—

"உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் நிலப் பண்பாட்டுத் திட்டங்கள், சிறு பாசனச் சிறப்பு நிதியொன்றிற்கு வகை செய்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்வதுடன், விதிப்புக் கொள்முதல் முறையைச் செயல்படுத்தி, உழவர் பெருமக்களுக்கு ஏற்ற வகைகளில் ஊக்கமளிக்க வேண்டுமென்று இப்பேரவை அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்கின்றது."

இந்த உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்களை ஆளும் கட்சியினர் எவ்வளவுதூரம் ஏற்றுக்கொண்டு அவைகளை அமல்படுத்துவார்கள் என்பது எனது பத்து பதினைந்து ஆண்டு கால அனுபவத்தில் தெரியும். இருந்தாலும் கூட இது ஒரு பொதுவான தீர்மானம். உற்பத்தியைப் பெருக்குவதற்கான தீர்மானம் இது. நாட்டு மக்களில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டிருக்கும் விவசாயத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டுமென்று கோருகிற தீர்மானம் இது. இதைப் பூரணமாக ஏற்றுக்கொள் வார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இருபது ஆண்டு களுக்கு முன்னுல் சட்டமன்றங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று விவாதிக்கிற நிலை இல்லாமலிருந்தது. அப்போது ஜன உற்பத்தி குறைவு. அன்னிய ஆட்சி இருந்த காலத்தில் வெளி தேசங்களிலிருந்து இறக்குமதி செய்து